Tiaano®
Innovation In Inert Metals

Ti Anode Fabricators Pvt. Ltd.
An ISO 9001 : 2008 Certified

Ti Nb
Ir Ta
Ru Pt

# "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2012-2013

- **Endeavor** : QUALITY
  Turnover Target : 100% ↑
- **Products for ...**
  Consumer Market : 3%
  Green Environment : 25%
- **Rejection Rate** : 100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  Up to May 13 : 708 Nos.
  Up to Apr. 13 : 701 Nos.
- **Performance May 13 ...**
  Turnover growth : 1%
  Employment growth : 0.47%
  100% Attendance : 10%

## MANAGEMENT

- **Managing Director**
  Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  Ms. P.E. Nancy
  Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil – Water Disinfection Equipments.

Fib Tec GRP Mandrels – FRP/ GRP Mandrels &Tanks

HydroGen Go Green – HHO Generators

Titanictrade (We deliver value chain) – Portal for Exotic Metals

– Tiaano Vidyashrm
(CBSE Pattern School)

## ACHIEVEMENT




### முயற்சி

செல்வி நன்றாகப் படிப்பாள். அவள் அம்மா ஒரு நாள் ஒரு பழத்தை காண்பித்து 'என் கையில் இருப்பது என்ன?' என கேட்டாள். 'இது ஒரு பழம் அம்மா! இது கூடவா எனக்குத் தெரியாது?' என செல்வி கூறினாள். அம்மா, பழத்தை இரண்டாகப் பிளந்து காட்டிக் கேட்டார்கள். இப்போது நீ இந்தப் பழத்திற்குள் என்ன பார்க்கிறாய்? 'பழத்திற்குள் நிறைய விதைகள் இருக்கின்றன, அம்மா' 'இந்த விதைகள் அனைத்தையும் விதைத்தால் எத்தனை மரங்கள் வளரும்?'

இப்போது செல்வி சற்று யோசித்துவிட்டுச் சொன்னாள், 'விதைகள் எல்லாவற்றிலிருந்தும் மரம் வருமா என்பது சந்தேகம்தான் அம்மா'. 'இதிலிருந்து உனக்கு என்ன தெரிகிறது?' என்ன இருந்தாலும் செல்வி புத்திசாலிப் பெண் அல்லவா! அம்மா எதற்காக இந்த கேள்வியைக் கேட்கிறார்கள் என்று அவளுக்குப் பட்டென்று புரிந்துவிட்டது. அவள் சொன்னாள், 'நாம் முயற்சிக்கும் எல்லாமே வெற்றி பெறும் என்று நினைப்பது தவறுதான் அம்மா!

நீ முயற்சி என்ற விதைகளை விதைத்துக்கொண்டே இரு நிச்சயம் ஒரு நாள் எதாவது ஒரு விதையிலிருந்து வெற்றி எனும் கனி கிடைக்கும். முயற்சிகள் தோல்வியடைவது குறித்து மனம் கலங்காதே, முயற்சிக்காமல் சும்மா இருப்பதைவிட முயற்சி செய்வதே மேலானது' என்று நம்பிக்கையுடன் கூறினாள்.

Ms. P.E. Nancy
Director – Admin

### நமது நம்பிக்கை

"நேற்று என்பது வெறும் கனவு
நாளை என்பதோ கற்பனை மட்டுமே
இன்று சிறப்பாக வாழ்ந்தால்
அது நேற்றைய கனவையும் இனிமையாக்கும்
நாளைய தினத்தையும் நம்பிக்கைக்குரியதாக்கும்
அதனால் இன்றைய தினத்தைக் கவனி
அதில் தான் விடியலுக்கான தீர்வே உள்ளது"

என்று மகாகவி காளிதாசர் கூறியிருக்கின்றார். இதைப்போல பல வரிகள் நமக்கு தெரிந்து இருந்தாலும் நிகழ்காலத்தை விட்டுவிட்டு கடந்த காலத்தை எண்ணி முடங்கிக் கிடப்பதும், எதிர்காலத்தை நினைத்து மனக்கோட்டையை கட்டுவதும் நம் நிகழ்கால நம்பிக்கையை குலைக்கக் காரணம். நிகழ்காலத்தில் நம் நம்பிக்கையைத் தூண்டும் சில வரிகள் (வழிகள்).

அடிமனதில் வெற்றிபெற துடிக்கும் எண்ணங்களை வரிசைப்படுத்து...
சிறப்பான வழிகளை தேர்வு செய்..
எப்படி செய்வதென எழுது..
வழக்கமான பணி நேரம் போக இதற்கென நேரத்தை ஒதுக்கு..
தினமும் எப்படி செய்வதென எழுது..
தயார் நிலைக்கு வந்ததும் சரியான சூழலை எதிர் நோக்கு..
தினமும் அதற்காக செயற்படப்போவதை கற்பனை செய், செயலாக்கு..
வெற்றி பெற்றவர் அணுகுமுறையை கையாள்..
தினமும் வெற்றி பெற்றவர்களை பார், படி..
மாதம் தவறாமல் வெற்றி இலக்கை நோக்கி உற்சாகப் பயிற்சியில் ஈடுபடு..

Compiled by : Mrs. S. Sasi Rekha
Marketing

## FUNCTIONAL WISHES



**Kamarajar Birth Day**
**15th July**

**Best Wishes from Tiaano Employees**

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel:044 - 22294565 |
| | M/s. Jeya Clinic, |
| | Tel: 098408 73107 |

## BIRTHDAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை
வளர்ப்பினிலே!



| | |
|---|---|
| **Mrs. S. Maragatham** Coating | **5th Jul.** |
| **Mr. BB. Ruben Sonar** Coating | **6th Jul.** |
| **Mr. M. Durai** Production | **8th Jul.** |
| **Mr. P. Arumugam** Marketing | **24th Jul.** |
| **Mr. R. Nagan** Quality Control | **24th Jul.** |
| **Mr. P.R. Bala Kumaresh** Project | **27th Jul.** |
| **Mr. M. Sathyaseelan** Purchase | **29th Jul.** |
| **Mr. P. Prathap** Fib Tec | **29th Jul.** |
| **Mr. R. Rajesh** Fib Tec | **30th Jul.** |

**Best Wishes from Tiaano Employees**

### கான்ஃபிடன்ஸ் கார்னர்

பள்ளி ஆசிரியர், குழந்தைகளிடம் “உங்கள் அன்பை வெளிப்படுத்தும் விதமாக யாரேனும் ஒருவருக்கு ஒரு ரோஜாவைக் கொடுங்கள்” என்றார். தன்னைப் பள்ளியிலிருந்து வீட்டில் தன் காரில் இறக்கிவிட்ட செல்வந்தர் ஒருவரிம் ஒரு குழந்தை ரோஜாவைக் கொடுத்தது. அவர் வீடு சென்றார். தன் வளர்ந்த மகனிடம் ரோஜாவைத் தந்தார். அவன் கதறிக் கொண்டே கட்டியணைத்தான்.

“உங்கள் வேலைகளுக்கு நடுவில் என்னை கவனிப்பதே கிடையாது. என்னை வெறுக்கிறீர்கள் என்று நினைத்து, தற்கொலைக்குத் தயாராகிக் கொண்டிருந்தேன். உங்கள் அன்புக்கு நன்றி” என்றான்.

சின்னஞ்சிறியதாய் இருந்தாலும் அன்பின் வெளிப்பாடு அற்புதங்களை நிகழ்த்தும்.

–கான்ஃபிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

### வாழ்க்கையும், சவால்களும்

சவால்களை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்? சவால்கள், பிரச்சனைகள் மற்றும் எதிர்ப்பில்லாத எளிதான வாழ்க்கை வேண்டுமென நீங்கள் விரும்புகிறீர்களா? அல்லது சவால்களை எதிர்கொண்டு அவற்றை வெற்றிகாண்பதில் நீங்கள் மகிழ்ச்சியடைபவரா?

சவால்களை எதிர்கொள்வது என்பது, மனித வாழ்க்கையில் ஓர் அங்கம். உண்மையில் இதுதான், மனித வாழ்க்கையை துடிப்புள்ளதாகவும் ஆர்வமூட்டுவதாகவும் மாற்றுகிறது. தடைகளை தகர்த்தெறிவதும், நமது அச்சங்களை கடந்து முன்னேறிச் செல்வதும், நமது மனதின் ஆழத்திற்குள் இருக்கும் ஆற்றல் ஆதாரங்களை கண்டறிவதும் சுவாரசியமானது. நமது பயணம் எளிதானதாக இருந்திருக்குமானால், இவைகளை கண்டறிகின்ற ஆனந்த அனுபவம் நமக்கு அநேகமாக கிடைத்திருக்காது.

ஒரு நபருக்கு, பிரச்சனைகள் என்ற இந்த தடைச்சுவரானது, வறுமையாக இருக்கலாம், மற்றொருவருக்கு உடல்சார்ந்த குறைபாடுகளாக இருக்கலாம், வேறு சிலருக்கு குழந்தை பருவத்தில் அனுபவித்த கொடுமைகளாக இருக்கலாம், மற்றவர்களுக்கோ சமூக புறக்கணிப்பாக இருக்கலாம், வேறு சிலருக்கு வீட்டில் காட்டப்படும் பாரபட்சமாக அல்லது கல்வி கற்க வசதியின்மையாக அது இருக்கலாம். பிரச்சனைகளை கொண்டிருப்பதா அல்லது இல்லையா என்பது நமக்கு முன் இருக்கும் விருப்பத்தேர்வு அல்ல, அவைகளை எவ்வாறு நாம் எதிர்கொள்கிறோம் என்பதே முக்கியம்.

நம்மைவிட அதிககடினமான பிரச்சனைகளை அல்லது தடைகளை எதிர்கொண்ட நபர்களின் வாழ்க்கையை உற்றுநோக்குவதும், அவர்களின் பொன்மொழிகளை படிப்பதும் நமது நம்பிக்கையை உருவாக்குவதற்கு சிறப்பான ஒரு வழியாக இருக்கிறது. இதன் மூலம், எந்தவொரு கடினமான சூழ்நிலையையும் எவ்வாறு நம்பிக்கையுடன் எதிர்கொண்டு வலுவானவர்களாகவும், வெற்றியாளர்களாகவும் வெளிவருவது என்பதை நாம் அறிந்துகொள்ளமுடியும்.

ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேல், மஹாத்மா காந்தி, மார்டின் லூதர் கிங், அன்னை தெரசா அல்லது நாம் தனிப்பட்ட விதத்தில் அறிந்திருக்கின்ற சாதாரண ஹீரோக்கள் வெறுமனே புலம்புவதிலும், கவலைப்படுவதிலும் தங்கள் வாழ்நாளை கழித்து இருப்பார்களே ஆனால், இந்த உலகம், இப்போது இருப்பதைவிட இன்னும் அதிக மோசமான ஒன்றாக மாறியிருந்திருக்கும்.

இந்த உலகை சிறப்பான வாழ்விடமாக மாற்ற, சவால்களை துணிவுடன் எதிர்கொள்ள நீங்கள் தயார் தானே?

Compiled by : Mr. K. Manivannan
Fib Tec

## தெரிந்து கொள்வோம்

**உங்கள் உணவுப் பொருட்களின் தரத்தை லேபிள் மூலம் கண்டறியலாம்.**

காய்கறி பழங்களில் உள்ள பார் கோடை (Bar Code) வைத்து அது என்ன மாதிரி என கண்டறிந்து வாங்க முடியும். அதனால் கடைக்காரரின் பேச்சை நம்பாமல் நீங்களே ஸ்பெஸலிஸ்ட் ஆக முடியும்.

நான்கு எழுத்துக்கள் 3 அல்லது 4 என்ற எண்ணில் ஆரம்பிக்கும் பழங்கள் காய்கறிகள் பூச்சிமருந்து தெளித்து வளர்க்கப்பட்டது. உதாரணத்திற்கு – 3011 / 4011.

8 என்ற எண்ணுடன் ஆரம்பிக்கும் சில லேபிள்கள் ஐந்து எண்களை கொண்டிருந்தால் அதை ஆர்கானிக் என கூறி அதிக விலையில் விற்பார்கள். ஆனால் உண்மையில் அது மரபணு மாற்றிய காய் மற்றும் பழங்கள். உதாரணத்திற்கு – 84011.

9 என்ற எண்ணுடன் ஆரம்பித்து அதில் ஐந்து எண்களை கொண்டிருந்தால் அதுதான் ஆர்கானிக் முறையில் பயிரிடப்பட்ட காய், பழங்கள் ஆகும். உதாரணத்திற்கு – 94011.

அதேமாதிரி வாங்கும் போது ஸ்டிக்கரை எடுத்து பாருங்கள் நகம் கீறின மாதிரி தெரிந்தால் கடைக்காரர் ஸ்டிக்கரை மாற்றியிருக்கிறார் என்று பொருள்.

Compiled by : Mr. C. Abilash
Facilitation

### மைல்கல்கள்

சாலைகளில் உள்ள மைல்கல் மூலம் நாம் செல்ல வேண்டிய தூரத்தை மட்டுமல்ல, இன்னொரு விஷயத்தையும் தெரிஞ்சுக்கலாம். மைல் கல்லில் உள்ள கலரை வைத்து அது எந்த சாலை என்பதை அறிந்து கொள்ளலாம்.

- மைல்கல்லில் மஞ்சள் மற்றும் வெள்ளை கலர் இருந்தால் அது தேசிய நெடுஞ்சாலை.
- பச்சை மற்றும் வெள்ளை கலர் என்றால் மாநில நெடுஞ்சாலை
- நீலம், வெள்ளை கலர் இருந்தால் மாவட்டசாலை.
- பிங்க் அல்லது கருப்பு, வெள்ளை நிறம் இருந்தால் ஊரக சாலை.

Compiled by : Mrs. M. Shahin
Facilitation

### நடப்பதெல்லாம் நன்மைக்கே!

இளைஞர் ஒருவர் வண்டியை ஓட்டிச் சென்ற போது விபத்துக்குள்ளாகிக் கால்கள் இரண்டையும் இழந்தார். அவருக்கு மரக்கால்கள் பொருத்தப்பட்டன. அவர் ஒருமுறை ஆப்பிரிக்காவிற்குச் சென்றார்.

அங்குள்ள காட்டுவாசிகள் சிலர் அவரைக் கடத்திச் சென்றனர். அந்த காட்டுவாசிகளின் தலைவன், 'இன்று நமக்கு நல்ல இளைஞன் ஒருவன் உணவாகக் கிடைத்திருக்கிறான். இவனுடைய மாமிசத்தை உண்டு மகிழ்ச்சியாக இருப்போம். அதற்கு முன்னதாக இவன் கை, கால்களை வெட்டி சூப் போடுங்கள்' என்றான். தலைவன் உத்தரவைக் கேட்ட காட்டுவாசிகள் அந்த இளைஞனை நெருங்கினர். அவர்கள் இளைஞனின் கால்களை வெட்ட முயன்ற போது, அந்தக் கால்கள் கடினமான வேறு பொருளாக இருப்பதைப் பார்த்தனர். கால்கள் மரக்கட்டையாக இருப்பது அவர்களுக்கு வித்தியாசமாக இருந்தது. அவர்கள் பயந்து போனார்கள்.

அதிர்ச்சியடைந்த அவாகள் தலைவனிடம் கால்கள் மரக்கட்டைகளாக இருப்பதைப் பற்றிச் சொன்னார்கள். தலைவனும் அந்த இளைஞனின் கால்களைப் பாத்தான். அதைப் பார்த்த அவனுக்கும் பயம் உண்டானது. தலைவன் அங்கிருந்தவர்களைப் பாத்து, 'நீங்கள் கடத்தி வந்திருக்கும் இந்த இளைஞன் மனிதனல்ல, கடவுளாகத்தானிருப்பான். இவரை வெட்ட வேண்டாம். அவரை விடுவித்து விடுங்கள்' என்றான்.

அந்த இளைஞன் விடுவிக்கப்பட்டான். அவனிடம் அவர்கள் ஆசி பெற்றுக் கொண்டனர். தப்பி வந்த இளைஞன், 'நாம் பலவீனமாக நினைப்பவை கூட, நமக்கு சில வேளைகளில் பலமாக அமைந்து விடுகிறது. கடவுள் நமக்கு எப்போதும் தீமை செய்வதில்லை' என்றான். இதை நாம் அனைவரும் உணர வேண்டும்.

Compiled by : Mr. S. Sivakumar
AGM

## நம்பித்தான் ஆக வேண்டும்

## 5S (தொடர்ச்சி XXIII)

**7. விமரிசனப் பார்வை**

அந்தக் காலத்தில், கப்பல்கள் ஒரு புதிய நகருக்கு வந்து நிற்கும் போது, அதிலிருக்கும் பயணிகள் உடனடியாக இறங்கி ஊருக்குள் சென்றுவிட முடியாது. காரணம் இத்தனை தூரம் கடலில் பயணம் செய்து வந்திருக்கும் அவர்களுக்கு ஏதேனும் தொற்று வியாதி இருக்குமா என்று சந்தேகப்படுவார்கள்.

இதனால், அந்தக் கப்பல்களுக்கு 'குவாரன்டைன்' என்று பெயர் சூட்டி, சில நாட்கள் அவர்களைத் துறைமுகத்திலேயே நிறுத்தி வைத்திருப்பார்கள். அதன்பிறகு, ஒரு மருத்துவர் அவர்களை ஆய்வு செய்து, யாருக்கும் நோய் அறிகுறிகள் இல்லை என்று உறுதி செய்த பிறகுதான், பயணிகள் கரையிறங்க முடியும்.

இப்போதும், வெளிநாடுகளுக்குச் செல்கிறவர்கள் அங்கே சென்று இறங்கியதும், முதல் வேலையாக 'குவாரன்டைன்' பரிசோதனைக்கு உட்பட வேண்டும் என்கிற கண்டிப்பான விதி இருக்கிறது.

இதேபோல், இங்கே நாம் 'மஞ்சள் ரிப்பன்' கட்டி ஒதுக்கிவைத்திருக்கும் உபகரணங்கள், கருவிகளையும் இப்படியொரு 'குவாரன்டைன்' பரிசோதனைக்கு உட்படுத்தப் போகிறோம். இந்த விஷயத்தை, நமது தொழிலாளர்கள் எல்லாரிடமும் தெளிவாகச் சொல்லிவிடுவது மிக அவசியம்.

## கவிதைகள்

### வெற்றி நிச்சயம்

தோல்வியை கண்டு துவண்டுவிடாதே,
வெற்றியை கண்டு மகிழ்ந்துவிடாதே,
தோல்வி கண்டவன் சாதித்துக் காட்டுவான்,
வெற்றி கண்டவன் மமதையில் அழிவான்,
ஒரு முறை வெற்றிபெற்றவன்
நல்லவனேயானால், தொடர்ந்து
அவன் சாதனைகள் வெற்றிபெறும்,
தோல்வியை கண்டு பயந்துவிடாதே,
மீண்டும் மீண்டும் முயற்சி செய்,
வெற்றி நிச்சயம் உனக்கே.
ஒரு முறைதான் மனிதப் பிறவி
அதனால் இந்தப் பிறவியில்..
நீ நல்லதையே செய்துவிடு
உனக்கு மட்டும் சந்தோசம் தேடாதே,
மற்றவருக்கும் சேர்த்து தேடு
உன்னால் உன்னை சுற்றி இருப்போர்
மகிழ்வார்கள் என்றால் நீ
அவர்களுக்காக வாழ்ந்துவிடு.

Compiled by : Mrs. T. Gowsala
Facilitation

### முயற்சி

எட்டிப்போனாலும் தொடலாம்,
பட்டுப்போனாலும் நடலாம்,
தட்டிப்போனாலும் எழலாம்,
முயற்சி இருந்தால்.

Compiled by : Mr. M. Kumar
Design

## சிந்தனைக்கு

- மகிழ்ச்சி என்பது எதிர்காலத்திற்காக நீங்கள் தள்ளிப்போடுகின்ற ஒரு விஷயமல்ல நிகழ்காலத்திற்காக நீங்கள் வடிவமைக்கின்ற ஒன்றே அது.

- **உத்வேகமளிக்கும் மந்திரம் :** நமது வாழ்க்கையில், இருள் நிறைந்த தருணங்களின்போதுதான், வெளிச்சத்தைப் பார்ப்பதற்கு நாம் சிறப்பு கவனம் செலுத்தவேண்டும்.

Compiled by : Mr. K. Manivannan
Fib Tec

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

இதேபோல், இங்கே நாம் ‘மஞ்சள் ரிப்பன்’ கட்டி ஒதுக்கிவைத்திருக்கும் உபகரணங்கள். கருவிகளையும் இப்படியொரு ‘குவாரன்டைன்’ பரிசோதனைக்கு உட்படுத்தப் போகிறோம். இந்த விஷயத்தை, நமது தொழிலாளர்கள் எல்லாரிடமும் தெளிவாகச் சொல்லிவிடுவது மிக அவசியம். தம்பிகளா, இங்கே சில கருவிகள் இருக்கு, இதெல்லாம் நிஜமாவே உங்களுக்குப் பயன்படுதா, இல்லையான்னு எங்களுக்குத் தெரியலை, அதனாலதான் ஓரமா ஒதுக்கி வெச்சிருக்கோம். ஒருவேளை, தினசரி வேலையின்போது உங்களுக்கு இந்தக் கருவி தேவைப்பட்டா, தாராளமாக எடுத்துக்கலாம். ஆனா, எந்தக் கருவியை, எப்போ எடுத்தீங்கன்னு இந்தச் சீட்டிலே எழுதிடுங்க!’

அவ்வளவுதான் விஷயம். இந்தச் செய்தி எல்லாத் தொழிலாளர்களுக்கும் சென்று சேர்ந்துவிட்டது என்பதை மட்டும் உறுதிப்படுத்திக்கொண்டு, நாம் வேறு வேலையைப் பார்க்கப் போய்விடலாம்.

அதாவது, அதன்பிறகு நாம் ‘மஞ்சள் ரிப்பன்’ பொருள்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. தோழிலாளர்களுக்கு அவை நிஜமாகவே தேவைப்பட்டால், அவர்களாகவே எடுத்துப் பயன்படுத்திக் கொள்வாகள்.

இந்தக் கதையெல்லாம் நடந்து முப்பது நாள்களுக்குப் பிறகு ‘குவாரன்டைன்’ பகுதியைச் சென்று பாருங்கள். தொழிலாளர்கள் அவ்வப்போது எடுத்துக்கொண்ட பொருட்களைத்தவிர, இப்போது அங்கே மிச்சமிருக்கும் பொருள்கள் எல்லாம் ஒரு மாதமாகப் பயன்படுத்தப்படாதவை என்று அர்த்தம், இல்லையா?

தொடரும்...

### TIAANO VIDHYASHRM INAGURATION (8th June 2013)

